தஞ்சையில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா : பாஜக, காங்கிரஸ் உள்பட 20 அமைப்பினர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

தஞ்சாவூர், ஏப்.16– தஞ்சையில்அம்பேத்கர் பிறந்த நாள் விழா பாஜக காங்கிரஸ் உள்பட 20 அமைப்பினர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சட்டமேதை அம்பேத்கர் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 14 ந் தேதி நாடுமுழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும். அந்த வகையில் நேற்று அம்பேத்கர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலை மறியல் பகுதியில் உள்ள அம்பேத்கர் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

முதலில் ஆதித் தமிழர் பாதுகாப்பு பேரவை மற்றும் அம்பேத்கர் கல்வி அறக்கட்டளை சார்பில் அம்பேத்கர் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பேரவைத் தலைவர் பொன்.ரெங்கசாமி தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரவை செயலாளர் சாமி.கருப்பையா பொருளாளர் ஜெயராமன் சட்ட ஆலோசகர் வி.சி.எஸ். செல்வராஜ் முன்னாள் அறக்கட்டளை தலைவர் பி.கணேசன் பேரவை முன்னாள் தலைவர் தவ.கணேசன் முன்னாள் செயலாளர்கள் காசிநாதன், கே.கணேசன் அறங்காவலர்கள் ஆசிரியர் ஆர்.பெருமாள், கே.அய்யாத் துரை, பி.சண்முகம், எஸ்.காந்தி, சௌந்தர்ராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் தஞ்சாவூர் மத்திய மாவட்ட தலைவர் ஜெய்சங்கர் தலைமையில் நிர்வாகிகள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காங்கிரஸ் கட்சி சார்பில் மாநகர மாவட்ட தலைவர் பி.ஜி.ராஜேந்திரன் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் துணை தலைவர் லெட்சுமி நாராயணன் பி.சி.சி.உறுப்பினர் ஜேம்ஸ் பொருளாளர் பழனியப்பன் நிர்வாகிகள் மகேந்திரன், ஆதி நாராயணன், பிரபாகரன், செந்தில் சிவகுமார், சுந்தர், வடிவேல், ஜான்சன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பாஜக சார்பில் பட்டியல் அணி மாவட்ட தலைவர் விக்னேஷ் ராஜா தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் மேலவெளி முரளிதரன் ஐ.டி.பிரிவு மாவட்ட தலைவர் தங்கதுரை மண்டல தலைவர் வெங்கடேசன் பட்டியல் அணி மாவட்ட பொதுச் செயலாளர் தருமா அரசு தொடர்பு பிரிவு மாவட்ட தலைவர் பால செல்வம் மாவட்ட பொதுச் செயலாளர்கள் ராஜேஷ் கன்னா, பிரபு பிரசார பிரிவு திருமலை ராஜன் முருகவடிவேல் வேலவன் எஸ்.டி.பிரிவு திலீப் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மக்கள் மறுமலர்ச்சி இயக்கம் சார்பில் நிறுவனர் மதியழகன் தலைமையில் தங்கையன், நாகராஜன், குமார், முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தஞ்சை மாநகர் மாவட்டம் சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு மாநகர் மாவட்ட செயலாளர் இடிமுரசு இலக்குவணன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் நிலஉரிமை மீட்பு மாநில செயலாளர் வீரன் வெற்றி வேந்தன், நிர்வாகிகள் மார்ட்டின், த. பிரபாகரன், கலைமாறன், சுகுமாறன் கரந்தை பகுதி செயலாளர் பென்னட் கீழவாசல் பகுதி செயலாளர் முருகன் மேட்டுப் பகுதி செயலாளர் வெங்கடேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். திப்பு அம்பேத்கர் பெரியார் மக்கள் நலச் சங்கம் சார்பில் தலைவர் துரை.அப்பாஸ் துணைத் தலைவர் சவரிராஜ் ஆலோசகர்கள் விமல் விசுவநாத், ராஜீவ்காந்தி, ரெனால்டு ரீகன் ஆகியோர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாவட்ட பொறுப்பாளர் விஜய் சரவணன் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாநகர தலைவர் ஆனந்த் கிழக்கு ஒன்றிய தலைவர் முத்து பாண்டியன் மாநகர துணை செயலாளர்கள் ராஜா, ராஜ்குமார் ஆலோசகர் ஜனா அம்மாப்பேட்டை சுதாகர், சசி மாநகர நிர்வாகிகள் சியாம், சாகுல் சங்கர் மணி ஆகாஷ், பரணி மற்றும் பலர் கலந்து கொண்டனர். அகில இந்திய தலித் ஆக்சன் கமிட்டி சார்பில் தேசிய பொதுச் செயலாளர் ராஜா தலைமையில் மாநில நிர்வாக தலைவர் ராஜேஷ் குமார் சட்ட ஆலோசகர் இரணிவேல் வழக்கறிஞர் பிரிவு தலைவர் ராமு தலைமை நிலைய செயலாளர் ராஜேஷ் கன்னா இளைஞர் அணி தலைவர் அஜீஸ் குமார் ஆகியோர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தேமுதிக சார்பில் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன் தலைமையில் பாராளுமன்ற வேட்பாளர் சிவநேசன் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் திருச்சி தங்கமணி பகுதி செயலாளர்கள் டேவிட் ஆரோக்கியசாமி, செந்தில் காந்தி புரட்சி பாரதம் கட்சி மாவட்ட பொறுப்பாளர் இல.அறிவுடைநம்பி தலைமையில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தாழ்த்தப்பட்டோர் சிந்தனை மன்றம் சார்பில் தலைவர் பேராசிரியர் பி.தமிழரசன் துணைத் தலைவர் ராஜீவ் காந்தி மற்றும் நிர்வாகிகள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பாதுகாப்பு ஏற்பாடுகளை தஞ்சை மண்டல துணை வட்டாட்சியர் நல்லதம்பி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முத்தமிழ்ச்செல்வன் வல்லம் துணை காவல் கண்காணிப்பாளர் நித்யா ஆய்வாளர் பார்த்திபன் மற்றும் காவலர்கள் செய்து இருந்தனர்.

100 சதவிகிதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி

சங்கரா கண் மருத்துவமனை பணியாளர்களின் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம்: கலெக்டர் ஜெயசீலன் துவக்கி வைத்தார்

விருதுநகர், ஏப்.16– கிருஷ்ணன்கோவில் சங்கரா மருத்துவமனை சார்பில் கண் பரிசோதனை செய்வோர் மக்களவை தேர்தலில் தவறாமல் வாக்களித்திருந்தால் அவர்களுக்கு 19.4.2024 மற்றும் 20.4.2024 ஆகிய நாட்களில் 50 சதவிகிதம் கட்டண சலுகை வழங்குவதாக அறிவித்துள்ளது.

விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையம் அருகில் மக்களவை தேர்தல் 2024 முன்னிட்டு நேர்மையான மற்றும் 100 சதவிகிதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி சங்கரா கண் மருத்துவமனை பணியாளர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் – மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் துவக்கி வைத்தார்.

மக்களவை பொதுத்தேர்தல் 2024 வருகின்ற ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, விருதுநகர் மாவட்டத்தில் 18 வயது நிரம்பிய வாக்காளர்கள், அனைவரும் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறும் வகையில் மாவட்டத்திலுள்ள ஊரகம், நகர்புறம், பேரூராட்சிகள், மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

18 வயது நிரம்பிய வாக்காளர் பட்டியலில் பெயருள்ள அனைவரும் 100 சதவீதம் தவறாமல் நேர்மையாக வாக்களிக்க வேண்டும். உலகத்தினுடைய மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவாக இந்திய பாராளுமன்றம் தேர்தல் நடைபெறுகிறது. உலக ஜனநாயக நாடுகளில் ஏறத்தாழ 96 கோடி வாக்காளர்களைக் கொண்ட மிகப்பெரிய நாடு இந்தியா தான்.

எனவே அந்த 96 கோடி மக்களும் வாக்களிக்க வருவதும் நேர்மையாக வாக்களிப்பதும் ஜனநாயகத்தின் உடைய மிக அடிப்படையான ஒரு செயல். அதில் அனைவரும் ஈடுபடுத்திக் கொண்டு இந்த தேர்தலை வெற்றிகரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் கிருஷ்ணன்கோவில் சங்கரா மருத்துவமனை சார்பில் மக்களவை பொதுத்தேர்தல் 2024 ஏப்ரல்19 அன்று தவறாமல் வாக்களிப்பதை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கண் பரிசோதனை செய்வோர் தேர்தலில் வாக்களித்திருந்தால் அவர்களுக்கு 19.4.2024 மற்றும் 20.4.2024 ஆகிய நாட்களில் 50 சதவிகிதம் கட்டண சலுகை வழங்குவதாக அறிவித்துள்ளது பாராட்டுக்குறியது என தெரிவித்தார்.

இந்த ஜனநாயக திருவிழாவில் 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதன் மூலம் தங்களது பங்களிப்பை வழங்கி மாவட்டத்தில் 100 சதவிகிதம் வாக்குப்பதிவு இலக்கை அடைய ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் ஆதரவு பெற்ற

வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு ஆதரவாக அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் வாக்கு சேகரிப்பு

விருதுநகர், ஏப்.16– தளபதி ஸ்டாலினின் ஆதரவு பெற்ற வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு ஆதரவு தரவேண்டும் என்று அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டார்.

விருதுநகர் பாராளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய பகுதியில் அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் "கை"சின்னத்திற்கு வாக்கு கோரி சுக்கில்நத்தம் மீனாட்சிபுரம் வெள்ளையாபுரம் செட்டிகுறிச்சி வதுவா ர்பட்டி போடம்பட்டி வாழ்வாங்கி உள்ளிட்ட கிராமங்களில் நேற்று மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை கிராமங்களில் விவசாய பணியாளர்கள் மற்றும் கிராம மக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொது மக்கள் மத்தியில் அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் பேசும் போது இன்றைக்கு மத்தியில் உள்ள அரசாங்கத்தினை அகற்றி விட்டு தமது ஆதரவுடன் காங்கிரஸ் ஆட்சியில் அமரும் போது விலைவாசி உயர்வை குறைக்க முடியும் என்றும் தளபதி ஸ்டாலினின் ஆதரவு பெற்ற வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு ஆதரவு தரவேண்டும் என கேட்டுக்கொண்டார். நிகழ்ச்சியில் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பாலகுருசாமி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

சேத்திருப்பு பள்ளி தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா

கொள்ளிடம், ஏப்.16– மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே சேத்திருப்பு நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் பாலுவிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு ஊராட்சி மன்ற உறுப்பினர் சுடர்மணி தலைமை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் சந்திரன் வரவேற்றார். புஷ்பவள்ளிகுமார், வள்ளி மற்றும் வாணிஸ்ரீ ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். ஆசிரியர்கள் கணேசன் சுந்தரி மற்றும் தன்னார்வலர் பவுனியாகலந்து கொண்டு விழா ஏற்பாடுகளை செய்தனர். விழாவில் சத்துணவு அமைப்பாளர் சத்யா, சத்துணவு ஊழியர் செல்வி துர்கா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தினி ரமேஷ் கூறுகையில் சேத்திருப்பு பள்ளிதலைமை ஆசிரியர் பாலுவின் கல்விப் பணி மற்றும் பொது நலம் ஆகியவற்றில் சிறப்பாக பணியாற்றிக் கொண்டு வருகின்றார். மாணவர்கள் நலனே தன்னலம் என்று ஒவ்வொரு நொடியும் உழைத்து வருகின்றார் என கூறினார்.

தங்கநகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் பல வாடிக்கையாளர்களால் **01.06.2023** முதல் **30.06.2023** வரை அடமானம் வைக்கப்பட்டு கடன் பெற்று காலம் கடந்த மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் **29.04.2024 திங்கள்கிழமை காலை 10.00** மணிக்கு கீழ்க்கண்ட முகவரியில் உள்ள எங்களது ஏலமையத்தில் பகிரங்க ஏலம் விடப்பட உள்ளது. மேலும் ஏலவிபரங்கள் மற்றும் ஆபரணங்கள் குறித்த விபரங்கள் எங்கள் கீழ்க்காணும் கிளைகளில் உள்ள தகவல் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலம் பற்றிய விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கு முறைப்படி பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. நகைக்கடன்களை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும், குறிப்பிடப்பட்ட ஏலத்தேதியை மாற்றி வேறு தேதியில் ஏலம் விடவும் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு. ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புபவர்கள், Pan Card, Photo ID Proof, TIN number உடன் கலந்து கொள்ளவும்.

முத்தழகு பைனான்ஸ் — **அதிகாரம் பெற்ற அதிகாரி**

எண் 58-A, முதல் தளம், காமராஜர் சாலை, நியூ பச்சையப்பாஸ் சில்க்ஸ் அருகில், காஞ்சிபுரம். — S.P.SOMASUNDARAMPILLAI APPROVED AUCTIONEER

காஞ்சிபுரம்

JL-2346,JL-2349,JL-2352,JL-2362,JL-2363,JL-2365,JL-2367,JL-2368,JL-2372,JL-2374, JL-2375,JL-2376,JL-2378,JL-2381,JL-2385,JL-2387,JL-2393,JL-2395,JL-2398,JL-2399, JL-2400,JL-2401,JL-2402,JL-2403,JL-2406,JL-2407,JL-2409,JL-2410,JL-2412,JL-2417, JL-2418

திருவள்ளூர்

JL-2176,JL-2180,JL-2181,JL-2183.

ஆவடி

JL-2168,JL-2178.

தரமணி

GL-0001.

பல்லாவரம்

JL-1003

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்ட்ரா
கிளை அலுவலகம்: 185, 2வது தளம், அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை 600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

22.06.2021 அன்று புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (இனி "FIHFCL" என குறிப்பிடுகிறது) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைப்பற்றப்பட்டு, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் **திருமதி வீரம்மாள் என்., திரு. நாகராஜன் டி மற்றும் திரு. நவீன் என்** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 604107510619038–ன்கீழ் 12.04.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.66,33,888/- **(ரூபாய் அறுபத்து ஆறு லட்சத்து மூப்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று எண்பத்தியெட்டு மட்டும்)** மற்றும் 13.04.2024 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை "எங்கு எப்படி உள்ளதோ அப்படியே" என்ற அடிப்படையில் 03.05.2024 நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.26,10,000/– (ரூபாய் இருபத்தாறு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.2,61,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தோறாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 02.05.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: அமிட்டம் 1: திண்டுக்கல் டவுன், 5வது வார்டு, நெட்டுத் தெரு, பழைய டி.எஸ்.எண்: 999/1, புதிய டி.எஸ். எண்: 2159, திண்டுக்கல் டவுன், நாகல்நாயக்கன்பட்டி துணைப்பிரிவு திண்டுக்கல் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தமிழ்நாடு, இந்தியா. விஸ்தீரணம் 1580 சதுர அடி, திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி துணை பதிவு மாவட்டம், திண்டுக்கல் டவுன், எல்லைகள்: வடக்கு: பாலசுப்ரமணி வீடு, கிழக்கு: டி.எஸ். எண்: 999/1ல் இரண்டாவது அமிட்டம், தெற்கு: டி.எஸ். எண்: 999/1ல் நகராட்சி காலியிடம், மேற்கு: டி.எஸ்.. எண்: 999/1ல் வடக்கு நெற்கு தெரு மற்றும் அளவீடு கிழக்கிலிருந்து மேற்கு வரை வடக்குப் பகுதியில் 37 அடி, தெற்குப் பகுதியில் 42 அடி, வடக்கு நெற்கு 47 அடி மேற்குப் பக்கத்தில், 33 அடி கிழக்குப் பக்கத்தில் மற்றும் மொத்தமாக 1580 சதுர அடி நிலம் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் வீட்டு மனையில் வழக்கமான வசதிகள். **அமிட்டம் 2**: பழைய டி.எஸ். .எண்: 999/1 புதிய டி.எஸ். எண் 2159, திண்டுக்கல் டவுன், நாகல்நாயக்கன்பட்டி துணைப்பிரிவு திண்டுக்கல் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம் 624001 திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா. விஸ்தீரணம் 495 சதுர அடி, திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி துணைப் பதிவு மாவட்டம், திண்டுக்கல் டவுன் வடக்கு: பாலசுப்ரமணி வீடு, கிழக்கு: சூசமேவேல் சொத்து, தெற்கு: நகராட்சி காலியிடம் டி.எஸ். எண்: 999/1, மேற்கு: டி.எஸ்.. எண்; 999/1ல் முதல்அமிட்டம் மற்றும் அளவீடு கிழக்கிலிருந்து மேற்கு வரை வடக்குப் பகுதியில் 16 அடி, தெற்குப் பகுதியில் 17 அடி, வடக்கு நெற்கு 33 அடி மேற்குப் பக்கத்தில், 27 அடி கிழக்குப் பக்கத்தில் மற்றும் மொத்தமாக 495 சதுர அடி நிலம் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் வீட்டு மனையில் வழக்கமான வசதிகள்.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனையெய்யப்படஉள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன்** (+919597689267), (+919152219751) **மற்றும் திரு. ராஜேந்திர தஹ்யா** (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : திண்டுக்கல், தேதி: 16.04.2024 — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN : U65923K12010PIC039179
பதிவு அலுவலகம்: IV/470ஏ (பழையது)W/638ஏ (புதியது) மணப்புரம் ஹவுஸ் லஸபாட் திருச்சூர், கேரளா 680567
கார்ப்பரேட் அலுவலகம்: மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், மூன்றாவது தளம், யூனிட் 301–315, ஏ விங், 'கனகிய வால் தெரு', அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை 400093, மகாராஷ்ட்ரா, தொலைபேசி எண்.022–66211000. இணையதளம்: www.manappuramhomefin.com

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் ("MAHOFIN")டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்பவும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். Pகடன்தாரர் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்ப மிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 9ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய தொகைக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் மற்றும் உடன்கடன்தாரர் பெயர்/கடன் கணக்கு எண்/கிளை	இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ளத ஈடுபெற்ற சொத்தின் விவரம்	அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை	உண்மையான சுவாதீன தேதி
1	கோட்சுத்திரஜெஸ்டின் சி & ஜெஸ்லின் MA90COLONS000005007657/ & MO90LALONS000005012641 நாகர்கோயில்	மறு சர்வே எண். 126/5, குளச்சல் சார்பதிவு அலுவலகம், மைமன்காலனி கிராமம், கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி அஞ்சல், குளச்சல், கன்னியாகுமரி, தமிழ்நாடு, பின்கோடு: 629251.	16.09.2022 & ரூ.4,59,642/-	13.04.2024

தேதி: ஏப்ரல் 16, 2024 — **ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
இடம்: நாகர்கோயில் — **மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்**

IDFC

ஐடிஎப்சி லிமிடெட்

CIN No. L65191TN1997PLCO37415 I Email: info@idfclimited.com I Website: www.idfclimited.com
பதிவு அலுவலகம்: 4வது மாடி, கேபிடல் டவர், 555, அண்ணா சாலை, திருவிக குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018 Tel: +91 44 4564 4201, +91 44 4564 4202, +91 44 4564 4223
கார்பொரேட் அலுவலகம்: 906/907, 9வது மாடி, எம்பசி சென்டர், ஜம்னாலால் பஜாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை 400 021 Tel: +91 22 2282 1549

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச் முன்பாக
நிறுவனத்தின் திட்ட விண்ணப்ப எண். CA(CAA)/2 (CHE)2024
நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் பிரிவு 102 மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் விஷயத்தில்
மற்றும்
ஐடிஎப்சி பைனான்சியல் ஹோல்டிங் கம்பெனி லிமிடெட் ("மாற்றப்படும் நிறுவனம்")
மற்றும்
ஐடிஎப்சி லிமிடெட் ("நிறுவனம்/ மாற்றிக்கொள்ளும் நிறுவனம்/ஒருங்கிணைக்கும் நிறுவனம்")
மற்றும்
ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட் ("ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனம்")
மற்றும்
அந்தந்த பங்குதாரர்கள் (''திட்டம்'')
இடையே ஒருங்கிணைப்பு கூட்டுத் திட்டம் தொடர்பான விஷயத்தில்

ஐடிஎப்சி லிமிடெட்
நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டது
Corporate Identity Number: L65191TN1997PLC037415
அதன் பதிவு அலுவலகம்: 4வது தளம், கேபிடல் டவர், 555 அண்ணாசாலை, திரு வி க குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018, தமிழ்நாடு, இந்தியா

மாற்றிக்கொள்ளும் நிறுவனம் / ஒன்றிணைக்கும் நிறுவனம்

ஐடிஎப்சி லிமிடெட்டின் ஈக்விட்டி பங்குதாரர்களின் கூட்டத்தை கூட்டுவதற்கான அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 (**'நிறுவனங்கள் சட்டம்'**) பிரிவு 230-232 விதிகள் மற்றும் அதன் பிற பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட பொருந்தக்கூடிய விதிகள் ஆகியவற்றின்படி ஐடிஎப்சி பைனான்சியல் ஹோல்டிங் கம்பெனி லிமிடெட் ("மாற்றப்படும் நிறுவனம்") **மற்றும்** ஐடிஎப்சி லிமிடெட் (**'மாற்றிக்கொள்ளும் நிறுவனம் /ஒருங்கிணைக்கும் நிறுவனம்'**) மற்றும் ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட் ("ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனம்") மற்றும் அந்தந்த பங்குதாரர்கள்